# பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் வேளாண்மை

திரு. **சி. செரஞ்சன்**
*விரிவுரையாளர், தமிழ்த்துறை, கலைப்பீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*

## ஆய்வுச்சுருக்கம்

*சங்க காலம் ஒரு நிலைமாறு காலகட்டமாகும். இனக்குழுவாக இருந்த சமூகம் நிலவுடமையாக மாறிய காலமாகும். இனக்குழுச்சமூகத்தில் உணவுக்காக அலைந்து திரிந்த மனிதன் நிலவுடமைச் சமூகத்தில் உணவை உற்பத்தி செய்யத் தொடங்கினான். இயற்கையுடன் இயைந்து வாழ்ந்த சங்ககால மக்கள் நிலவியல் பின்புலத்தில் தங்களது உற்பத்தி முறைகளை உருவாக்கியிருந்தனர். குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் வலுவிழந்து மருத நிலங்களாக உருமாற்றம் கொள்ளத் தொடங்கிய போது இந்நில மக்களின் வாழ்வியலானது பயிர்ச்செய்கையை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மைத் தொழிலிலேயே தங்கியிருந்தது. இந்த வேளாண்மைத் தொழிலானது மனித வலுவை மூலதனமாகவும் நிலத்தை அடிப்படையாகவும் கொண்டு மேற்கொள்ளப் படுவதாகும். சங்க சமூகத்தில் உழவு முக்கியமான பொருளாதாரச் செயலாகவும் சமூகத்தின் அடித்தளமாகவும் விளங்கியிருந்தது. பொருளாதாரச் செயற்பாட்டில் வேளாண்மைத் தொழிலின் முக்கியத்துவத்தையும் அத்தொழிலில் கையாளப்பட்ட தொழில் நுட்பங்களையும் இவ்வாறான தொழில் நுட்பங்களின் வளர்ச்சி பயிர்ச்செய்கை நடவடிக்கையிலும் சமூகத்திலும் ஏற்படுத்திய மாற்றங்களையும் வெளிக்கொண்டு வருவதே இந்த ஆய்வினது நோக்கமாக அமையப் பெற்றுள்ளது. விபரண மற்றும் பகுப்பாய்வு முறைகள் இந்த ஆய்வின் அணுகுமுறைகளாக அமையப் பெற்றுள்ளன.*

**திறவுச்சொற்கள் :-** வேளாண்மை, உற்பத்திகள், உருமாற்றம், நாடோடி



## அறிமுகம்

*காட்டினை வெட்டி உழுது பண்படுத்தி விளைச்சலுக்கு ஏற்ற நிலமாக மாற்றுவது வேளாண்மைத் தொழிலாகும். மனித வாழ்வியலோடு இன்றியமையாத இத்தொழிலை மக்கள் தங்கள் உயிர்த் தொழிலாகவும் உயரிய தொழிலாகவும் போற்றி வந்தனர். இவ்வேளாண்மைத் தொழிலானது பன்னெடுங் காலமாகத் தமிழ் மக்களது வாழ்வியற் தொழிலாக அமைந்திருந்த தன்மையினைச் சங்ககாலப் புலவர்கள் முதல் இன்றைய புலவர்கள் வரை எடுத்துரைத்துள்ளனர். எனினும் இதற்கான முதல் சான்றினைத் தருவது பழந்தமிழ் இலக்கியங்களும் இலக்கண நூல்களுமாகும். தொல்காப்பியம் இத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களை 'வேளாண்' மாந்தர் எனக் குறிப்பிட்டுள்ளது. அவர்களது அடிப்படைத் தொழில் பயிர்த்தொழிலை ஓம்பிக் காத்து நல்ல விளைச்சலினைப் பெருக்கி நாட்டினை வளப்படுத்துவதாகும். அவர்களது முழுக் கவனமும் பயிர்த்தொழில் செய்வதிலேயே இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இக்கருத்தினை அரண் செய்யும் வகையில் தொல்காப்பியர்,*

> **"வேளாண மாந்தர்க் குழுதூண் அல்லது**
> **இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"**
> **(தொல்.பொருள்.மரபு.,18)**

*எனக் குறிப்பிடுகின்றார்.*

*இலக்கண நூலார் 'வேளாண்' என்ற சொல்லை வேள் + ஆள் எனப் பிரிப்பர். வேள் என்னும் வேர்ச் சொல்லுக்கு 'மண்' என்ற ஒரு பொருளுமுண்டு. வேளாண் - 'மண்ணை ஆளுதல்' என்ற பொருளைத் தரும். மண்ணைப் பண்படுத்தி ஆள்பவன் வேளாண் எனப்பட்டான். 'வேளாண்மை என்பதை ஒரு கலை என்றும், ஓர் அறிவியல் என்றும் கூறலாம். வேளாண்மை என்பது பொருளாதார வளர்ச்சிக்காகப் பயிர்களையும் கால்நடைகளையும் கொண்டு செய்யப்படும் தொழிலாகும். இவ்வேளாண்மைத் தொழிலில் பயிர் உற்பத்தி, கால்நடைப் பராமரிப்பு, தோட்டக்கலை, பால் பண்ணை, காடு வளர்ப்பு, மீன்வளம் மற்றும் வேளாண் பொறியியல் போன்ற*

பிரிவுகள் அடங்கும்.' (கந்தசாமி, இல.செ., ப.28) எனக் கூறுவதில் இருந்து வேளாண்மை என்பது நெற்பயிர்ச் செய்கையை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாது அதன் உப தொழில்களாக விலங்கு வேளாண்மை, காடு வளர்ப்பு, மேட்டு நிலப் பயிர்ச்செய்கை முதலாக பிற தொழில்களுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளமையை உணரமுடிகிறது. வேளாண்மைத் தொழிலுக்கு அடிப்படையாக அமைவது நிலமேயாகும். இதனால்தான் வள்ளுவர் 'நிலம் என்னும் நல்லாள்' (குறள், 40) என நிலத்தைக் குறிப்பிட்டிருந்தார். மேலும் வள்ளுவர் நிலம் பற்றிக் கூறும்போது,

"தள்ளா விளையுளும் தக்காரும் தால்விலார்
செல்வரும் சேர்வது நாடு" (குறள்., 731)

எனக் குறிப்பிடுகின்றார். விளையுள் என்பது நிலத்திற்கு வழங்கப்படும் சொல்லாகும். 'தள்ளா விளையுள்' என்பதற்குப் பரிமேலழகர் 'குன்றாத விளையுளைச் செய்வோர்' என உரை வகுக்கின்றார். விளையுள் என்ற சொல் 'விளைவு', 'விளைச்சல்' என்னும் பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. 'விளை' என்னும் வினைப் பகுதியிலிருந்து இது தோன்றியது. 'விளையுள்' என்பதற்கு 'விளைநிலம்' என்னும் பொருளுமுண்டு. சான்றாக, 'பெருநீர் விளையுள் எம் சிறுநல் வாழ்க்கை' (நற்றிணை., 45) என்ற நற்றிணைப் பாடலடியினைக் குறிப்பிடலாம். இதற்கு உரை எழுதிய பின்னத்தூர் நாராயணசாமி, 'கடல் நீரை விளை வயலாக்கி கொள்ளுகின்ற எமது சிறிய நல்வாழ்க்கை' என்ற விளக்கத்தினைத் தந்துள்ளார். சங்க இலக்கியங்களில்,

'முடந்தை செல்லின் கழையமை கழனிப்
பிழையா விளையுள் நாடகப் படுத்து' (பதிற்., 32,13-14)

"மழை யொழுக்காறாப் பிழையா விளையுட்
பழையன் மோகூர்" (மதுரைக்காஞ்சி. 507)

"பிழையா விளையுட் பெருவளம் சுரப்ப" (சிலம்பு.,11,28)

"மழைவளம் தருதலின் மன்னுயிர் ஓங்கிப்
பிழையா விளையுளும் பெருகியது அன்றோ"
(மணிமேகலை.,11,90-91)



விளை என்ற சொல் 'விளைச்சல்' என்ற பொருளில் எடுத்தாளப் பட்டுள்ளது. விளையுள் என்பது பெரும்பாலும் நாட்டிற்கும் ஊருக்கும் அடைமொழியாக வந்திருப்பதை இப்பாடலடிகளில் காணலாம். நாட்டிற்குப் பெருமை தருவதாக வயலையும் நிலவளத்தையும் நீர்வளத்தையுமே அடையாகக் கூறுதல் தமிழ் மரபு. இதனைக் கம்பராமாயணத்தின் பாடலடிகளிலும் காணலாம். சான்றாக,

"பொன்னி நாடு பொருஇலர் எய்தினார்
செந்நெலும் கரும்பும் கமுகும் செறிந்து"
(கிட்கிந்தா காண்டம், 46)

'காவேரி நாடு அன்ன கழனி நாடு ஒறீஇ'
(கங்கைகாண் படலம், 01)

என்ற பாடலடிகளை வகைமாதிரிகளாகக் குறிப்பிடலாம். சங்க இலக்கியங்கள் உழவுத்தொழில் செய்பவர்களை உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் போன்ற பெயர்களால் சுட்டியுள்ளன. உழத்தல் என்பது இடைவிடாது முயலும் மெய்ம் முயற்சியைக் குறிக்கும் சொல் ஆகும். இடைவிடாது உழைக்கும் மெய்ம்முயற்சி உழவுத் தொழிலுக்கு வேண்டப்படுதலின் இத்தொழிலையும் உழவு என்ற சொல்லால் சுட்டியுள்ளனர். சங்கப்பாடல்கள் தன் நிலத்தில் தானே உழுது பயிர் செய்பவர்களை களமராவர் (புறம்., 212) எனவும் உழுவித்து உண்பவர்களை மனைக்களமர்(புறம்., 387,251) எனவும் சுட்டியுள்ளன. சங்க இலக்கியங்கள் உழவுத்தொழிலின் மேன்மை, முக்கியத்துவம், உழவனின் சிறப்பு, உழவு செய்கின்ற முறை, உழவிற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகள், உழவில் பயன்படுத்திய அறிவியல் நுட்பங்கள் போன்றவற்றைப் பதிவு செய்துள்ளன.

**நிலத்தைப் பண்படுத்துதல்**

நிலத்தை உழுது பண்படுத்துவதன் மூலம் மண் தளர்ந்து காற்றோட்டம் அதிகரித்து பயிர்கள் கூடிய விளைச்சலைத் தரும். சங்கத் தமிழர்கள் நிலத்தைப் பலமுறை உழுது பண்படுத்தியுள்ளனர். கார்காலத்தில் பெய்த மழையின் ஈரம் உலர்வதற்கு முன்னர் நிலத்தைப் பலமுறை உழுதமையை,

"சிறுபுறங் கவைலயினனாக உறுபெயல
தண்துளிக்கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போல் நெகிழ்ந்தவற் கலுழ்ந்தே" (அகம்., 2623-25)

" பூமி மயங்கப் பல வுழு வித்தி" (புறம்., 120.2)

*என அமையும் புறநானூற்று அடிகள் மண்ணைப் பலமுறை உழுது மென்மையாக்கியதை காட்டுகின்றன. மண்ணைப் பலமுறை உழுவதால் மண்ணின் தன்மை மேம்படும் என்ற நுட்பத்தினை அறிந்துள்ளனர். பயிர் நிலங்களை உழுது பண்படுத்துவதற்காக எருதுகளில் ஏரினைப் பூட்டி உழுதுள்ளனர்.*

'நெடுநெல் அடைச்சிய கழனியேர் புகுத்து
குடுமிக்கட்டிய படப்பையொடு மிளிர
ஆரிகால் போழ்ந்த தெரிபகட்டுழவர்'

*என அகநானூறு உழவுத்தொழிலில் பயிற்றுவிக்கபட்ட எருதுகள் பயன்படுத்தப்பட்டதை பதிவு செய்துள்ளது.*

**நீர்பாசனம்**

*வேளாண்மைத்தொழிலுக்கு அடிப்படையாக விளங்குவது மழை நீராகும். சங்கத்தமிழர் மழை நீரைச் சேமித்து வைத்து உழவுத் தொழிலுக்குப் பயன்படுத்தியுள்ளனர். குளங்களில் தேக்கி வைக்கப்பட்ட நீர் அவர்களுக்குக் கோடை காலத்தில் பயன் பட்டுள்ளதை,*

"கூதிர் ஆயின் தண் கலிழ் தந்து
வேனில் ஆயின் மணிநிறம் கொள்ளும்
யாறணிந் தன்று நின் ஊரே" (ஐங்குறுநூறு, 45 )

*என ஐங்குறுநூறு பாடுகிறது. ஆற்று நீரை அணைகட்டி மறித்து நீரைத் தேக்கி வைத்தனர். இத்தகைய அணைகள் பெரு மழையில் அடித்துச்செல்லப்பட்டதை,*

"சிறை அழி புதுப்புனல் பாய்ந்தெனக் கலங்கீக்
கழனீத் தாமரை மலரும்" (ஐங்குறுநூறு, 53)

*எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நீர் நிலைகளில் தேக்கி வைக்கப்பட்ட நீரின் மட்டம் குறையும் போது அந்நீரினை மேலே கொணர்ந்து வயலுக்கு நீர் பாய்ச்சுவதற்காக அவர்கள் பயன்படுத்திய அறிவியலை மதுரைக்காஞ்சி,*



"நீர்த் தெவ்வும் நீ ரைத் தொழுவர்
பாடுசிலம்பு இசை ஏற்றத்
தோடு வழங்கும் அகல ஆம்பியின்
குயன் அகய வயல் நிறைக்கும்" (மதுரைக்காஞ்சி, 89-92)

*எனப் பதிவு செய்துள்ளது. வாய் அகன்ற ஆம்பியின் மூலமாக கிணற்று நீர் மேலே கொண்டுவரப்பட்டு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.*

**உழவுக் கருவிகள்**

*பண்டைத்தமிழரிடையே வேளாண்மையின் பொருட்டு; பல்வேறு கருவிகள், ஆயுதங்கள் புழக்கத்தில் இருந்துள்ளன. உழுது பண்படுத்திய நிலத்தினை மட்டப்படுத்துவதற்காக 'தளம்பு' என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். 'மலங்குமிளிர் செறுவின் தளம்பு தடிந்து இட்ட பழன வாளை பரூஉம் கண் துணியல்' (புறம்., 61) என்ற புறநானூற்றுப் பாடல் உழவர்கள் நிலத்தை மட்டப்படுத்தும் போது அங்குள்ள வாளை மீன்கள் தளம்பில் பட்டு துண்டிக்கப் பட்டதைப் பதிவு செய்துள்ளது. எனவே தளம்பு என்பது உலோகத்தாலான ஒரு கருவியாக இருக்கலாம். வேளாண்மையில் களைபிடுங்குதல் என்பது முக்கியமான ஒன்று. களை பிடுங்குவதற்கு 'தளர்' என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர்.*

'கோடுடைக் கையர் துளர் எறி வினைஞர்' (அகம். 161 )

'தொய்யாது வித்திய துளர்படு துடவை' (புறம். 24)

*ஆகிய அடிகள் களை பிடுங்கும் போது நிலத்தைக் கிளறிக் கொடுப்பதற்காக பல கிளைகளையுடைய தளர் என்ற கருவி பயன்படுத்தப்பட்டதை அறியத் தருகிறது.*

**உரமிடுதல்**

*பயிர் நிலத்தை வளமாக்கவும் விளைச்சலைப் பன்மடங்கு பெருக்கவும் பண்டைத்தமிழர் பசளைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.*

'இரும்புனிற்று எருமைப் பெருஞ்செவக் குழவி
பைந்தாது எருவின்' (குறுந்., 271)

'தாதெருமறுகின் ஆபுறத் தீண்டும்' (அகம்., 86)

'தாதெரு மறுகின் மூதூர்' (நற்றிணை., 141)

'இருமுள் வேலி யெருப்படுவரைப்பின்' (பெ. பா., 14)

போன்ற பாடலடிகள் ஆநிரைகளின் கழிவுகளும் (தொழு உரம்) குப்பைகளும் (தழையுரம்) பசளையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளமையை கூறுகின்றன. ஆநிரைகளின் கழிவுகளை பசளைக்காக சேர்த்து வைக்கும் இடம் சங்க இலக்கியங்களில் தெரு மன்றம் என்ற பெயரால் சுட்டப்பட்டுள்ளது. உரமிட்ட வளமான சிறிய நிலப்பரப்பில் அதிகளவு விளைச்சலைப் பெற்றுள்ளனர். இதற்கு,

'ஒருபிடி படியும் சீறிடம்
எழு களிறு புரக்கும் நாடு' (புறம்., 40.10-11)

என வரும் புறநானூற்று அடிகள் சான்று பகர்கின்றன. ஒரு பிடியானை படுத்துறங்கும் வயற்பரப்பில் ஏழு களிற்று யானைகளுக்கு உணவளிக்கத்தக்க பெரு விளைச்சலைப் பெறத்தக்க வகையில் நெற் செய்கை நடை பெற்றுள்ளது.

## தினைப்புனம் காத்தல்

பயிர்களை விலங்குகள் பறவைகள் சேதம் விளைவிக்காது பாதுகாத்துள்ளனர். அவ்வாறு பாதுகாக்கும் செயற்பாட்டைச் சங்க இலக்கியம் தினைப்புனம்காத்தல் என்ற பெயரால் சுட்டுகின்றது. பறவைகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்க தழல், தட்டை, குளிர் போன்ற கருவிகளைப் பயன்படுத்தியதை,

'தழலை வாங்கியும் தட்டை ஓம்பியும்
அழல் ஏர் செயல்' (அகநானூறு, 188:11-12)

என அகநானூறும் விலங்குகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாக்க அவற்றை விரட்டுவதற்குக் கணை, அடார், ஞெகிழி போன்றவற்றைப் பயன்படுத்தியதை,

'வாலா வேழம் வணர் குரல் வகர்தலின்' (நற்., 393:4)

'சிறு பொறி மாட்டிய பெருங்கல் அடாஅர்' (நற்., 119:3)



எனவும் வரும் அடிகளும் பதிவு செய்துள்ளதை. காணலாம். விளைநிலங்களை சுற்றி மரம் செடி, கொடிகளைக்கொண்டும் காட்டு முட்களைக் கொண்டும் வேலிகள் அமைக்கப்பட்டு பயிர் நிலங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

சங்க காலச் சமூக அமைப்பின் அடித்தளமாக வேளாண்மை விளங்கியது. வேளாண் தொழிலே பிற எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்திருந்தது. உணவு உற்பத்தி இல்லாமல் சமூகவாழ்வும் அரசாட்சியும் இல்லை என்பதைச் சங்க இலக்கியங்கள் நன்கு பிரதிபலிக்கின்றன. புறநானூற்றுப் பாடல்கள் ஏரைக் காப்பவனின் குடியைக்காப்பதை அரசனின் கடமையாகவே காட்டியுள்ளன. உழவர்கள் உணவு உற்பத்தியாளர்களாக மட்டுமல்லாமல் நாட்டின் செழிப்பிற்கும் நிலைத்த தன்மைக்கும் காரணமானவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். உழவு என்பது வாழ்க்கையின் ஓர் அங்கமாக அன்றி மையமாக இருந்துள்ளது.

## உசாத்துணை நூல்கள்


1. சுப்பிரமணியன்.ச.வே., சங்க இலக்கியம்(முழுவதும்), 2003, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. சஞ்சீவி.ந.,சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், 1971, சென்னை.
3. சுந்தரம்.மெ., சங்ககாலத்தமிழரின் கடல் வணிகம்,1978, பாரிநிலையம், சென்னை.
4. முத்து கண்ணப்பன்.தி., சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், 1978, அதிபத்தர் பதிப்பகம், சென்னை.
5. சசிவல்லி.வி.சி., பண்டைத்தமிழர் தொழில்கள், 1989, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.